# அருள்ஜோதி

சுத்த சன்மார்க்கத் தமிழ் திங்களிதழ்

தனிஇதழ் ரூ.10/– ஆண்டு சந்தா ரூ.110/–

அருள்: 27 சுபகிருது ஆண்டு/ ஆனி–ஆடி / ஜூலை –2023 ஜோதி: 7

மாத பூசத்திருநாள்: 18.7.2023 அடுத்த மாதம் பூசம்: 14.8.2023



தெய்வத்திரு.
**சதீஷ்ராஜ் அடிகளார்,**
நிறுவனர்

தயவுத்திருமதி.
**தனலட்சுமி அம்மையார்,**
ஆசிரியர், வெளியிடுபவர்
மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:
**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**
புதிய எண் 33, பழைய எண். 17, கென்னடி சதுக்கம்,
முதன்மைச்சாலை, சென்னை– 600011.
தொடர்புக்கு: 044–25570770 9003034056


## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் | 4 |
| திருமண தகவல் | 6 |
| வடலூர் அருட்பயணம் | 7 |
| அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை | 8 |
| நமது பாவத்தை நீக்க வள்ளல் பெருமான் சொன்ன 3 விடயங்கள் என்ன ? | 10 |
| மாமிசத்தை பற்றி விஞ்ஞானம் மற்றும் மெய்ஞானம் கூறும் உண்மைகள் | 12 |
| உயிரின் உரிமை | 20 |
| அன்பர்களின் அனுபவங்கள் | 22 |
| நாங்கள் கொல்லா விரதம் மேற்கொண்டுள்ளோம் நீங்கள் எப்படி? | 25 |
| இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் தோற்றுவாய் | 26 |
| வள்ளல் பெருமானின் வரிகள் கூறும் ஒரு அற்புதக் கதை | 28 |
| ஒழிவில் ஒடுக்கம் | 32 |

# வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள்

(மூன்றாவது தத்துவம்)

## 58. அருள் ஒளி வட்டம் உன்னைச் சூழ்ந்தது

உலகில் ஞானிகள், தெய்வங்கள், பெரியோர்கள் படங்களில் அவர்களின் தலைக்குப் பின்னால் ஒளிக் கற்றைகளை வரைந்து பிரகாசிப்பது போலப் போடுவார்கள். கோவில்களில் சிலைக்குப் பின்புறம் உள்ள கவரில் கண்ணாடி வில்லைகளை வட்டமாகப் பதித்த ஒரு அமைப்பை வைத்து அதன் நடுவில் ஒரு விளக்கை வைப்பார்கள், அந்த விளக்கின் சுடர் கண்ணாடியில் பட்டுப் பிரதிபலிக்கும்.

இவை எல்லாம் என்ன என்று பெரியவர்களை கேட்டால், அது அருள் ஒளி வட்டம் என்று கூறுவார்கள். அருள் ஒளி என்பது எண் கடந்த கோடி, சூரிய, சந்திர, அக்னி, மின்னல்களின் ஒளிகள் ஒன்றாகக் கூடினாலும் அருள் ஒளிக்கு நிகராகாது என்று வள்ளலார் கூறுவார்.

இப்படிப்பட்ட இவ்வளவு பேரொளியை வண்ணங்களால் தடவியும், சிறு விளக்கொளியைக் காட்டியும் வைத்துள்ளனர். உண்மையில் அந்தப் பெரியவர்களோ, தெய்வங்களோ அருள் ஒளியைப் பெற்றிடவில்லை. அப்பேரொளி யாருக்கு வாய்க்கும் எனில் சுத்த சன்மார்க்க அனுபவம் கைவரப் பெற்றால் அன்றி அருள் ஒளிவட்டம் சூழாது. இக்கருத்தை ஆண்டவரே கூறி இராம லிங்கம் உன்னை அருள்ஒளி சூழ்ந்து விளங்குகிறது என ஆண்டவர் வாயால் வாழ்த்தப் பெற்ற அருள்ஒளி சூழப்பெற்றவர் வள்ளலார். பாடலைப் பார்ப்போம்.

**துன்பெலாம் தீர்ந்தன சுகம்பலித் ததுநினைச் சூழ்ந்த**
**துருள் ஒளி நிறைந்தே 3676**

இப்படிப்பட்ட அருள்ஒளி சூழப்பெற்ற பேறே அது. ஆண்டவர் தம் வாயால் கூறும் பேறோ யாருக்கு வாய்த்தது? வள்ளலாருக்கு அன்றி.



## 59. ஓங்கார அணையின் உச்சியில் இருந்தது அப்போது ஒருவருள் ஒருவர் கலந்தது

இறைவன் ஓங்கார வடிவானவன். உலகில் ஓங்கார நாதம் எங்கும் எதிலும் ஒலித்துக் கொண்டுள்ளது. கடலலையில் ஓங்கார நாதம், காற்று வீச்சில் ஓங்கார நாதம், மலைவீழ் அருவியில் ஓங்கார நாதம், கைகளை கொண்டு

இரு காதுகளைப் பொத்தினால் ஓங்கார நாதம், சுத்த அமைதியில் ஓங்கார நாதம், பேரிரைச்சலில் அதுவே. இவ்வாறு ஓங்கார ஒலி எங்கும் எதிலும் முழுவதுமாகப் பரவியுள்ளது. இந்த ஓங்காரத்தை பிரணவம் என்ற சொல்லால் வடமொழியாளர் சுட்டுவர்.

பிரணவப் பொருளை பிரம

னிடம் முருகன் கேட்க, பிரமன் தெரியாது என்று கூற, படைப்புத் தொழிலைச் செய்யும் உனக்குப் பிரணவப் பொருள் தெரியவில்லையே என அவனது தலையில் கொட்டி, அவனைச் சிறையில் அடைத்ததா கப் புராணம் கூறும். அதே முருகன் அதே பிரணவப் பொருளைச் சிவனிடம் கேட்க, சிவன் தெரியாது எனக் கூற, நான் உமக்கு கூற வேண்டு மானால் நீர் மாணவக் கோலத் தில் மண்டியிட்டுக் கீழ் இருப்பீராக. நான் ஒரு மேல் இருக்கையில் அமர்ந்து பிரணவப் பொருளை உமக்குக் கூறுவேன் என முருகன் கூற சிவன் அவ்வாறே கீழ் அமர்ந்து பிரண வப் பொருளைக் கேட்டார். இதனால் முரு கனுக்குத் தகப்பன் சாமி என்றொரு பெயர் வந்தது.

இவைகள் ஓங்காரச் சிறப்பை உணர்த்த வந்த புராணக் கதைகள். வள்ளற் பெருமான் ஒரு மனிதனாகத் தோன்றி ஓங்காரமாம் பிரணவத்தின் உச்சியில் அமர்ந்திருந்தார். அப்பொழுது ஆண்டவர் வருகிறார். அவர் தமது செம்மை வடிவத்தை மாற்றி, பளிங்கு வண்ண வடிவத்தில் வருகிறார். ஆண்ட வரே நீங்கள் உட்காருங்கள் என ஓங்கார உச்சியில் இருந்த வள்ளலார் எழுந்து நிற் கிறார். நான் வந்தால் நீ எழுந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. உட்கார் என ஆண்டவர் வாய் மலர, வள்ளலார் அமர்ந்து கொள்கிறார். அப்பொழுது ஆண்டவர் ஆங்காரத்தை ஒழித்து விடு என ஆணையிட்டார். உடனே ஆங்காரம் முற்றிலும் தணிந்தது. அப்பொழுது வள்ள லாரின் உடல் ஊங்கார வடிவம் ஆயிற்று. ஊங்காரம் என்பது உகரம். ஆண்டவரது வடிவமும் ஊங்கார வடிவமே. அதனால் இருவர் உடனும் ஒன்றுள் ஒன்று கலந்தது. இப்பொழுது வள்ளலார் தான் ஆண்ட வரா? ஆண்டவர் தான் வள்ளலாரா? என வேறுபாடே இல்லாது, ஒரே வெளிமயமாய் ஆனவர் வள்ளலார்.

ஓங்காரம் வள்ளலாருக்குத் தந்த இந்தப் பரிசை எவர் பெற்றார்? எங்கு பெற்றார். பாடலலைப் பார்ப்போம்.

**ஓங்கார அணைமீது நானிருந்த தருணம்**
**உவந்தெனது மணவாளர் சிவந்த வடிவகன்று**
**ஈங்காரப் பனிக்குவடி வெடுத்தெதிரே நின்றார்**
**இருந்தருள்க என எழுந்தேன் எழுந்திருப்ப தென்நீ**
**ஆங்காரம் ஒழி என்றார் ஒழித்திருந்தேன் அப்போ**
**தவர் நானோ நான் அவரோ அறிந்திலன்முன் குறிப்பை**
**ஊங்காரம் இரண்டுருவும் ஒன்றானோம் அங்கே**
**உறைந்தஅனு பவம்தோழி நிறைந்த பெருவெளியே**
**5440**

## 60. முதல் மகனாகிய வள்ளற் பெருமானை ஆண்டவர் வளர்த்த விதம்.

கொலை புரிவார் தவிர மற்றை எல்லோ ரும் நினது குலத்தவரே நீ எனது குலத்து முதன் மகனே 4159 என்று ஆண்டவர் வாயாலேயே வள்ளற் பெருமான் ஆண்ட வர் தம் அருட்குலத்துக்கு மூத்தமகன் என அறுதியிடப் பெற்றவர். அவ்வாறு தம் அருட் குலத்திற்கே முதல் மகனாக்கிய வள் ளலாரை, ஆண்டவராகிய அப்பனும் அரு ளாகிய தாயும் எப்படி வளர்த்திருப்பார் கள்! தாம் வளர்க்கப் பெற்றது 10 விதமான உயர்நிலையில் வளர்ந்ததாக அருட்பாவில் குறித்துள்ளார். முதலில் எவ்வாறெல்லாம் வளர்க்கப் பெற்றார் என்பதைப்பார்ப் போம்.

1. **தெருட்டிஎனை வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய் 4797**
2. **திடத்தமர்த்தி வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய் 4798**
3. **செயமுறவே வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய் 4799**
4. **தெய்வமென வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய் 4800**
5. **சித்துருவின் வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய் 4801**
6. **செந்தமிழின் வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய் 4802**
7. **தேன்மையொடு வளர்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய் 4803**
8. **சேய் எனவே வளர்க்கின்றாய் சிற்சபையில்**

நடிக்கின்றாய் 4804

9. செல்வமொடு வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய் 4805

10. திரு அளித்து வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய் 4806

இவ்வாறு மிகத் தெளிவாக வளர்த்தல், 2. மிகத் திடமாக வளர்த்தல், 3. செயம் ஆகிய எதிலும் வெற்றியே பெறவே வளர்த்தல், 4. தெய்வத்தைப் போற்றி வளர்த்தலைப் போலத் தம் உள்ளத்தில் வளர்த்தல், 5. சித்துக்களின் மொத்த உருவமாக சித்து உருவாகவே வளர்த்தல், 6. அழிவுறாச் செந்தமிழாய், அமிழ்தனைய செந்தமிழ் போல வளர்த்தல், 7. தேன்மை எனில் தேனுக்குள் வந்த இனிமையின் இயல் போல இனிமையினும் இனிமையாக வளர்த்தல், 8. தனக்குரிய செல்லப் பிள்ளையாக வளர்த்தல், 9. தன் சொத் துக்கள், செல்வங்கள் அனைத்திறுக்கும் ஒரே பிள்ளை என வளர்த்தல், 10. என்றும், எதுவும், எங்கும் குறைவில்லாது வளர்த்தல்.

இவ்வாறு ஆண்டவர் தம் முதல் மகனாக, ஆக்கி வளர்த்தெடுக்கும் பாக்கியம், வேறு யாருக்குக் கிடைக்கும்? யாருக்குக் கிடைத்தது? இது வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரமல்லவா?

## திருமண தகவல்

| | | |
|---|---|---|
| பெயர் | - | R.ஹரிணி |
| பிறந்ததேதி | - | 19 11 1997 |
| பிறந்த நேரம் | - | 7.10 ( காலை ) |
| பிறந்த இடம் | - | சென்னை |
| உயரம் | - | 5.2 அடி |
| படிப்பு | - | M.A, M.Ed., |
| மதம் | - | இந்து |
| இனம் | - | இந்து வள்ளுவன் |
| கோத்திரம் | - | சிவகோத்திரம் (சைவம்) |
| பூர்விகம் | - | சென்னை |
| நட்சத்திரம் | - | புனர்பூசம் பாதம்–3 |
| ராசி | - | மிதுனம் |
| லக்கனம் | - | விருச்சகம் |
| வேலை | - | --------- |
| பிறந்த வரிசை | - | முதல் |
| தந்தை பெயர் | - | வி.ரவிச்சந்திரன் (அருள்ஜோதி அன்ன ஆலயம்) |
| தாயார் பெயர் | - | J.மாலதிதேவி (பட்டதாரி ஆசிரியை) |
| உடன் பிறந்தோர் | - | R.ரோஷினி |
| முகவரி | - | புளியந்தோப்பு சென்னை |
| கைபேசி எண் | - | 91762 43608 / 63815 34458 |

**மாப்பிள்ளை**

* சைவமாக இருக்க வேண்டும்
* எந்த மதமாக இருந்தாலும் பரவாயில்லை
* சென்னையில் வசிப்பவராக இருக்க வேண்டும்



# வடலூர் அருட்பயணம்

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!

ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்று, அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம், 4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6.சித்திவளாகம்.

இந்த புனித பயணத்தில் கலந்துகொள்பவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டணம் ரூ.900 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புக்கு: 9003034056**

**மாத பூச நாள்: 18-07-2023**

**குறிப்பு: அடுத்த பயணம்: 14-08-2023**

# அருட்பெருஞ்ஜோதி

## அகவல் உரை

**கதிர்நலம் என்இரு கண்களில் கொடுத்தே அதிசயம்**
**இயற்றுஎனும் அருட்பெருஞ் ஜோதி 274**

ஒளியும் அதனால் விளையும் நன்மையும் எனக்கு உண்டாக, அவ்விரண்டையும் என் கண்களுக்குக் கொடுத்து (பேரொளிக் கதிர்வீச்சு), அருள் அதிசயச் செயல்களைச் செய்க என்று அருளியது அருட்பெருஞ்ஜோதி.

**அருள்ஒளி என்தனி அறிவினில் விரித்தே**
**அருள்நெறி விளக்குஎனும் அருட்பெருஞ் ஜோதி 276**

திருவருள் ஞான ஒளியை என்னுடைய தனித்த அறிவில் (எப்பள்ளியிலும் எந்த ஆசிரியரிடமும் கல்வி பயிலாது) விளங்கச் செய்து, சன்மார்க்கத்தை உலகவருக்கு வெளிப்படுத்துக என, அருள் ஆணையாக உரைத்தது அருட்பெருஞ்ஜோதி.

**பரைஒளி என்மனப் பதியினில் விரித்தே**
**அரசுஅது இயற்றுஎனும் அருட்பெருஞ் ஜோதி 278**

என் மனமாகிய கோயிலில் சிவத்தின் அருட்சக்தியை நிறுவி, ஞான ஒளியைப் பரப்பி, உலகுக்கு இன்பம் தரும் செயல்களைச் செய்க (அருள் ஆட்சி) என்று என்னைப் பணித்தது அருட்பெருஞ்ஜோதி.

**வல்லப சத்திகள் வகைஎலாம் அளித்துஎனது**
**அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி 280**

பெறுதற்கரிய அருஞ்செயல் நிறைந்த ஆற்றல் மிக்க சக்தி வகைகள் எல்லாவற்றையும் எனக்குத் தந்து, என் துன்பங்கள் யாவற்றையும் போக்கி அருளுவது அருட்பெருஞ்ஜோதி.

**ஆரியல் அகம்புறம் அகப்புறம் புறப்புறம்**
**ஆரமுது எனக்குஅருள் அருட்பெருஞ் ஜோதி 282**

புற நிலையில் விளங்கும் சூரியன், சந்திரன், விண்மீன், நெருப்பு என்னும் நான்காக விளங்கக் காணும் சிவத்தின் புற ஒளியை, அகத்தில் மனம், உயிர், ஆன்மா முதலிய கரணங்களிலும், கண் முதலிய இந்திரியங்களிலும், நிறைவு பெறச் செய்து எனக்கு சிவஞான ஒளியாகிய இனிய அமுதத்தை (அக அமுதம், அகப்புற அமுதம், புற அமுதம், புறப்புற அமுதம் ஆகிய நான்கையும்) அருள்வது அருட்பெருஞ்ஜோதி.

**சூரிய சந்திர சோதியுள் சோதிஎன்று**
**ஆரியர் புகழ்தரும் அருட்பெருஞ் ஜோதி 284**

சூரிய ஒளியிலும், சந்திரனுடைய ஒளியிலும் அவற்றின் உள் நின்று இயங்கும் காரண காரிய ஒளியாக இருந்து விளங்குவது (சிவம்) என்று, ஞானியர்களால் புகழ்ந்தோதப்படுவது அருட்பெருஞ் ஜோதி.

**பிறிவுஏது இனிஉனைப் பிடித்தனம் உனக்குநம்**
**அறிவே வடிவுஎனும் அருட்பெருஞ் ஜோதி 286**

அக ஆன்ம வடிவாயும், உடல் உருவாயும் விளங்கியிருந்து உன்னை விட்டுப் பிரிவதில்லை என அருளி உன்னை ஏற்றோம் (பற்றிக் கொண்டோம்), ஆதலால் உனக்கு



நம் சிவஞானமே வடிவாகும் என அருள்வது அருட்பெருஞ்ஜோதி.

**எஞ்சேல் உலகினில் யாதொன்று பற்றியும்**
**அஞ்சேல் என்றுஅருள் அருட்பெருஞ் ஜோதி 288**

இவ்வுலகியல் தொடர்புகளின் விளைவுகள் எதுபற்றியும் குறைபடாதே. அவைகள் எதனாலும் அச்சமடையாதே என்று அருளி, பேரின்ப சித்தியில் என்னை வாழச் செய்வது அருட்பெருஞ்ஜோதி.

**மாண்டுஉழ லாவகை வந்துஇளம் காலையே**
**ஆண்டுகொண்டு அருளிய அருட்பெருஞ் ஜோதி 290**

அருட்பேறு பெறாமல், வீணாக இறந்து வருந்தாதவாறு. இளமைப் பருவத்திலேயே என்னை ஆட்கொண்டு, உள் ஒளியாய் இருந்து, உயர் நிலையை அடைய அருள் புரிந்தது அருட்பெருஞ்ஜோதி.

**பற்றுகள் அனைத்தையும் பற்றுஅறத் தவிர்த்துஎனது**
**அற்றமும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி 292**

என்னைப் பற்றியுள்ள நான் எனது என்னும் அகப் புறப் பற்றுகள் (ஆசைகள்) யாவற்றையும் முழுவதும் ஒழித்து; என்னுடைய அழிவு, துன்பம், வருத்தம், சோர்வு தீமை ஆகிய குற்றங் குறைகளையும் நீக்கியருளியது அருட்பெருஞ்ஜோதி.

**சமயம் குலமுதல் சார்புஎலாம் விடுத்த**
**அமயம் தோன்றிய அருட்பெருஞ் ஜோதி 294**

மத உணர்வு, சாதிப் பிறப்புணர்ச்சி முதலிய உணர்வுகளின் தொடர்பை நீக்கி, அருள் உணர்வுடன் இருக்கும் அத்தருணம், என் உள்ளத்தில் தோற்றமளித்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.

**வாய்தற்கு உரித்துஎனும் மறைஆ கமங்களால்**
**ஆய்தற்கு அரிய அருட்பெருஞ் ஜோதி 296**

மெய்யுணர்வு (இறை உண்மை) காண்பதற்குத் துணை செய்வன என்று சான்றோர்களால் கூறப்படும் வேதங்களாலும், ஆகமங்களாலும் ஆராய்ந்து காண முடியாதது அருட்பெருஞ்ஜோதி.

**எல்லாம் வல்லசித்து எனக்குஅளித்து எனக்குஉனை**
**அல்லாது இலைஎனும் அருட்பெருஞ் ஜோதி 298**

அரிய செயல்கள் எல்லாவற்றையும் செய்து முடிக்க வல்ல அறிவு ஆற்றலை எனக்குத் தந்து, சிவத்தை அன்றிப் பெறும் சிறந்த பொருள் வேறில்லை என்னும் உணர்வு தந்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.

# நமது பாவத்தை நீக்க வள்ளல் பெருமான் சொன்ன 3 விடயங்கள் என்ன ?

**மற்றவருக்கு நன்மை செய்யும் பொழுது மறக்க கூடாத ஒரு விடயத்தை பற்றி பார்க்க போகின்றோம்.**

ஒரு தந்தைக்கு 2 மகன்கள் இருந்தார்கள். தந்தை மிகவும் நல்லவர். நம்மால் யாருக்கு எந்த துன்பமும் வரக்கூடாது என்று நல்ல கொள்கையுடன் வாழ்பவர். மகன்கள் இருவரும் உயிர் கொலை செய்தல், புலால் உண்ணுதல் போன்ற பாவப் பழக்கங்களுடன் இருந்தார்கள். தந்தை எவ்வளவு சொல்லியும் மகன்கள் கேட்கவில்லை. மகன்கள் மீது மிகுந்த பாசம் கொண்டவர் தந்தை. அவர்கள் செய்யும் பாவத்திற்கெல்லாம் அவர்கள் ஒருநாள் அதற்குரிய தண்டனையை அனுபவிப்பவர்கள் என்று உணர்ந்து, அவர்களுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்கிறார். அவர்கள் கேட்கவில்லை. எனவே மகன்கள் மீது மிகுந்த பாசம் கொண்டுள்ள தந்தை, மகன்களுக்கு எந்த ஆபத்தும் வந்து விடக்கூடாது என்பதற்காக மகன்களுக்காக நிறைய புண்ணிய செயல்களை செய்து வந்தார்.

மகன்களும் தந்தையின் புண்ணியத்தில் நலமாய் இருந்தார்கள். ஆனால் தந்தைக்கு உடல் நலம் குறைந்தது, மகன்கள் சொன்னார்கள் நீங்கள் நல்லவராக வாழ்ந்ததால் உங்களுக்கு கடவுள் என்ன கொடுத்து விட்டார். நோயில் படுக்கத்தான் வைத்து விட்டார். நாங்கள் கெட்டவராக இருந்ததால் கடவுள் எங்களை என்ன தண்டித்து விட்டார்? நாங்கள் உங்களைவிட நன்றாக தான் உள்ளோம் என்றார்கள். அதற்கு தந்தை நான் செய்த பாவத்திற்கு இந்த தண்டனை என்றார். அதற்கு மகன்கள் இருவரும் நீங்கள் என்ன பாவம் செய்தீர்கள் என்றார்கள். உங்கள் மேல் வைத்த பாசம் தான் நான் செய்த பாவம். எனக்கு வரும் துன்பத்தை விட உங்களுக்கு வரும் துன்பத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. எனவே நீங்கள் எவ்வளவு கெட்டவர்களாக இருந்தும், எனக்கு ஏதேனும் துன்பம் வந்தாலும் பரவாயில்லை, உங்களுக்கு ஒரு துன்பமும் வரக்கூடாது என்று நினைத்து உங்களுக்காக நான் புண்ணியங்கள் செய்தேன் அல்லவா அதற்கான தண்டனை தான் இது.

செய்த செயல் சரி ஆனால் நோக்கம் தவறானது. செயலை விட நோக்கமே முதன்மையானது. நீங்கள் தீய பழக்கங்களை உடையவராக இருந்தாலும், உங்களுக்கு எந்த துன்பமும் வரக்கூடாது என்று நினைத்து புண்ணியச் செயல்களை செய்ததால் தான், இன்று நீங்கள் செய்த தப்பு நியாயம் என்றும், நான் செய்த நன்மை தப்பு என்றும் பேச வைத்து விட்டது. இதனால் நீங்கள் கடைசிவரை மனம் திருந்தாமல், மேலும் மேலும் தப்பு செய்ய நான் காரணமாகி விட்டேன்.

பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதற்கு பதிலாக. நானே தீயவழிக்கு செல்ல காரணமாகிவிட்டேன். அதனால் தான் எனக்கு இந்த தண்டனை. நான் செய்த தப்பை நான் உணர்ந்து விட்டேன் அதனால் எனக்கு இந்த துன்பம் விரைவில் நீங்கும்.

ஆனால் நீங்கள் செய்த தப்பை எல்லாம் நியாயப்படுத்துகிறீர்கள். அதனால் விரைவில் உங்களை துன்பம் சூழப்போகிறது. அதற்குள் உங்களை திருத்திக்கொள்ளுங்கள் என்கிறார் தந்தை. அப்படி என்றால் எங்களுக்காக நீங்கள் இனிமேல் புண்ணியச் செயல்களை செய்யாமல் உங்களுக்காக செய்து கொள்ளப் போகிறீர்கள் அப்படித்தானே? என்று மகன்கள் இருவரும் கேட்டார்கள். இல்லை எனக்கு இன்னும் கருணை உள்ளத்தோடு ஜீவகாருண்யம் செய்யும் பக்குவம் வரவில்லை. இப்பொழுதும் உங்களுக்காகத்தான் புண்ணியம் செய்யப் போகின்றேன். ஆனால் அதற்காக உங்களுக்கு எந்த துன்பமும் வரக்கூடாது என்று நான் எண்ணப் போவதில்லை. இந்த புண்ணியத்தின் பயனாக நீங்கள் நல்வழிப்பட வேண்டும் என்றே நான் வழிபட போகிறேன்.

நீங்கள் நல்வழிப்பட்டால் உங்களுக்கு வரப்போகின்ற ஆபத்து தானே நீங்கிவிடும். உங்களால் பிறருக்கும் எந்த துன்பமும் நேரிடாது. நான் செய்யும் புண்ணியத்தால்

நீங்கள் நல்வழிப்பட்டு வாழ்ந்தால் உங்களை நன்மை செய்ய வைத்ததற்கான புண்ணியமும் என்னைச் சேரும் என்றார் தந்தை. மகன்கள் சிந்தித்து தனது தந்தையின் இந்த நிலமைக்கு நாம் தான் காரணம் என்று உணர்ந்து மாறத் தொடங்கினார்கள்.

தயவிற்கும், தாட்சண்யத்திற்கும் உள்ள வேறுபாடு இதுதான். தயவு என்பது எல்லோரிடத்திலும் காட்டுவது, தாட்சண்யம் என்பது நமக்கு வேண்டப்பட்டவர்களிடத்தில் மட்டும் காட்டுவது. தயவு எதிர்பார்ப்பு அற்றது. தாட்சண்யம் எதிர்பார்ப்புடையது. தன் மகன்கள் என்பதால், அவர்கள் தவறே செய்தாலும், அவர்களுக்கு எந்த துன்பமும் வரக்கூடாது என்று நினைத்த தந்தையின் செயல், தனது மகன்கள் என்னும் தாட்சன்யத்தால் உண்டானது. இந்த தாட்சண்ய உடன்பாடு என்பது, பாவத்திற்கு காரணமாகிறது என்பார் வள்ளல் பெருமான்.

நாம் தெரிந்தே பாவங்கள் செய்வதற்கு காரணங்கள் 8 உண்டு. 1.மோகம், 2.மறதி, 3.அபிமானம், 4.அகங்காரம், 5.செல்வசெருக்கு, 6.தாட்சண்ய உடன்பாடு, 7.உணவு, 8.புகழ் வழக்கம். இந்த எட்டு காரணங்களால் தான், நாம் பாவம் என்று தெரிந்தும் அந்த பாவத்தை செய்து விடுகின்றோம் என்கிறார் வள்ளல் பெருமான்.

இப்படி தெரிந்த செய்த பாவங்கள் நீங்க வழி ஒன்று உண்டு. தவத்தாலும், விரதத்தாலும் உடலை இலைக்க செய்து, யாத்திரை சென்று புண்ணிய தலங்களில் வசித்து இயன்ற அளவில் அன்ன விரயம் செய்தால் நீங்கும். அப்படி செய்ய வசதி அற்றவர்களாகவும், சக்தி அற்றவர்களாகவும் இருந்தால், மகான்களுக்கு தொண்டு செய்வதால் நீங்கும் என்பார் வள்ளல் பெருமான்.

இந்த கதையில் தந்தை செய்த புண்ணியம் பிள்ளைகளுக்கு வந்ததா என்றால் இல்லை. தந்தை செய்த புண்ணியம் தந்தைக்கு தான் வந்தது. ஆனால் அவர் விருப்பம் பிள்ளைகள் துன்பப்பட கூடாது என்பது. எனவே தந்தையின் புண்ணியத்தால் பிள்ளைகள் நன்றாக இருந்தார்கள். ஜீவகாருண்யம் செய்பவரின் விருப்பம் எதுவோ அது நிறைவேறும். அது மற்றவர்களின் நலனாக இருந்தாலும், ஜீவகாருண்யம் செய்பவரின் விருப்பமே நிறைவேறியது என்பதால் அவர் செய்த புண்ணியம் அவரையே சேர்ந்ததாகிறது. அந்த புண்ணியத்தால் அவர் விரும்பிய நன்மையை பெறுகிறார்.

ஆனால் தந்தையின் இந்த பற்றே பிள்ளைகள் தவறு செய்ய காரணமாக இருந்ததால் தந்தையானவர் பிள்ளைகளின் பாவத்திற்கு உடந்தையாகிறது. எனவே அது அவருக்கு பாவத்தை உண்டாக்குகிறது. ஒருவருடைய குணம் அறிந்து அவருக்கு என்ன செய்தால் நன்மை உண்டாகும் என்று தெரிந்து நன்மை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நன்மை செய்வதிலும் பிழை ஏற்பட்டு விடும் என்கிறார் வள்ளுவ பெருந்தகை. உயிர் கொலையும், புலைபுசிப்பும் உடைய மகன்களுக்கு ஆபத்து வரக்கூடாது என்று, புண்ணியம் செய்தவருக்கே பாவம் உண்டாகும் என்றால், நாம் புலால் உணவு உண்ணாவிட்டாலும், புலால் உண்ண நாம் உழைத்து சம்பாதித்த பணத்தை செலவழிப்பது, அல்லது புலால் வாங்கி வந்து தருவது, அல்லது சமைத்து தருவது, எவ்வளவு பாவத்தை தரும் என்பதை சிந்தித்து உணரலாம். தீய ஒழுக்கங்களில் உடையவருக்கு நாம் எந்தவித நன்மை செய்வதாக இருந்தாலும், நாம் மிக கவனமாக சிந்தித்து செயல்பட வேண்டும். நம்முடைய செயல் அவருக்கு அந்த தீய ஒழுக்கங்களில் இருந்து விடுபட காரணமாக அமைய வேண்டும்.

எனவே பெற்றோர், பிள்ளைகள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியவர்களுக்காக ஜீவக்காரூண்யம் செய்யும்போது அவர்கள், உயிர் கொலை செய்தல், புலால் உண்ணுதல் போன்ற பலவிதமான பாவப்பழக்கங்களை உடையவராக இருந்தால், அவர்கள் அந்த பழக்கங்களை விட்டு நல்வழிப்பட வேண்டும் என்று அந்த மடத்தில் நிறுத்தி ஜீவகாருண்யம் செய்ய வேண்டும். இதனால் அவர்கள் நல்வழிப்பட்டு ஜீவகாருண்ய அன்பர்களாக மாறிவிடுவார்கள்.

அதன்பின்பு அந்த ஜீவகாருண்யமே அவர்களை காப்பாற்றும். வழிபாடு, தியானம், ஜீவகாருண்யம் எதுவாக இருந்தாலும் கருத்தில் என்ன உள்ளது என்பதே முதன்மையானது. யாருடைய நன்மையை கருத்தில் நிறுத்தி செய்கின்றோமோ அந்த நன்மை அவர்களை அடைந்தே தீரும்.

--சிவகுரு ஐயா, சத்திய தீபம்

https://youtu.be/6F3fdLkSMb8

# மாமிசத்தை பற்றி விஞ்ஞானம் மற்றும் மெய்ஞானம் கூறும் உண்மைகள்

நாமே பிற உயிர்களின் கல்லறையாகும் போது இலட்சிய வேட்கையுடன் எங்கனம் சிந்திக்க இயலும்? --ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

## எல்லா உயிரிலும் நான் இருக்கிறேன்

எல்லா உயிர்களிடத்திலும் நான் சமபாவத்துடன் இருக்கிறேன் எல்லா இடங்களிலும் சஞ்சரிக்கும் காற்று ஆகாயத்தில் எவ்வாறு இருக்கிறதோ, அவ்வாறே உயிர்கள் அனைத்தும் என்னிடம் நிலைப்பெற்று இருக்கின்றன.

--பகவத் கீதை

## தேவனின் ஆசீர்வாதம்

கொலை செய்யாதிருப்பாயாக (எந்த உயிரையும்) -பழைய ஏற்பாடு

இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கும் பெறுவார்கள்

-- புதிய ஏற்பாடு

## இறைவனே விரும்பவில்லை

நீ பலி கொடுக்கும் தசையையும், இரத்தத்தையும் இறைவன் விரும்பவில்லை உனது நம்பிக்கையே அவர் எதிர்பார்க்கிறார்.

-- திருக்குர்ஆன் (22 37)

விலங்குகளை கொல்வதும், பண்ணைகளை அழிப்பதும் பூமியில் சாபத்தை கொண்டு வந்து சேர்க்கும். எல்லா வல்ல இறைவன் இவற்றை அங்கீகரிப்பதில்லை.

கடவுள் உன்னிடத்தில் தன் கருணையைச் செலுத்துவது போல, நீ எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டு.

---------- நபிகள் நாயகம்

## கீழ்பட்டோர் உணவு

மாமிசம் துர்நாற்றத்தை உடையது. வெறுக்கத் தக்கது. அது மனிதர்கள் உண்பதற்கேற்ற உணவல்ல. கீழ்ப்பட்டவர்களே மாமிசத்தை விரும்புவார்கள். --- புத்தர்

## அருள் உடையவன் அல்ல

தன் உடம்பைப் பெருக்கச் செய்வதற்காக மற்றோர் உயிரின் உடம்பைத் தின்கின்றவன் எவ்வாறு அருளுடையவனாக இருக்க முடியும்? ----திருக்குறள்

## அன்பு செலுத்துங்கள்

எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துங்கள், பிற உயிர்களில் ஏதேனும் ஒன்றுக்குத் தீங்கு செய்பவர், முதலில் தம்முயிருக்கே தீங்கு செய்து கொள்கிறார்.

-- பகவான் மகாவீரர்

## விட்டொழியுங்கள்

விலங்குகளுக்குத் துன்பம் விளைவிக்கும் உங்களிடமிருந்து நான் உணவைப் பெற மாட்டேன் உங்கள் வாழ்வைக் கெடுத்துக் கொண்டிருக்கும் புலாலை முதலில் விட்டொழியுங்கள். ---- குருநானக்

## தெய்வீகம் வளரும்

புலாலை மறுப்பதால் மனிதர்களிடையே தெய்வீக அம்சம் அதிகரிக்கிறது.

--- காந்திஜி

## உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

வண்டி இழுக்கும் நல்ல குதிரை நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு- இவை
அதிகரிக்க வேண்டுமடி பாப்பா!
உயிர்களிடத்தில் அன்புவேணும்-தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும் -இது

வாழும் முறைமையடி பாப்பா!

----------- மகாகவி பாரதியார்

சிறு தெய்வங்கள் துன்பம் செய்பவை என்று மக்கள் அறியாமையால் பல தெய்வங்களின் பெயரைச் சொல்லி அச்சிறு தெய்வங்களுக்கு பலி கொடுக்க ஆடு, கோழி முதலியவற்றை அலங்கரித்து பலியிடப் போவதை பார்த்து மனம் நொந்து நடுங்கினேன். சிறு தெய்வங்களின் கோயில்களைக் கண்டபோதெல்லாம் அஞ்சினேன்.

------ திருஅருட்பா

# அனுபவ ஆனந்த தீபிகை

## உபதேச வினா-விடை

**உரையாக்கம்: ஜோதி, வீ.கோடீஸ்வரன், காஞ்சிபுரம்**

**69. எளிமையாக ஞானம் பெற என்ன வழி?**

உலகத்திலுள்ள பொருள்கள் அனைத்தும் பரனுடையது. அதுதான் மெய், எள்ளத்தனையும் நமது எனல் பொய். இது சொல்லால் மட்டும் அன்று மனத்தாலும் உணர்ந்து, ஆசை பற்றற நீக்கினாலே பிறவி அறும். நம்மீதுள்ள மயக்கமான நினைப்பு மறப்பு நீங்கி ஞானம் பெறலாம்.

**70. பெரியோரைப் பற்றி நின்றால் ஞானம் வருமா?**

எல்லா உயிரையும் தம்முயிர்போல் எண்ணுவார், ஏற்றத்தாழ்வு இல்லார், பொய் வேடம் தரியார், வீம்பு அறியார், பெருமை, சிறுமை இவை இரண்டும் கொள்ளார் இப்படிப்பட்ட பெரியோர்களை அணுகினால் ஞானம் வரும்.

**71.சாகாதிருக்க என்ன செய்யவேண்டும்?**

உயிர்களை பேதமற்று கருணையோடு பார்த்தலே பேரின்பம் வந்தெய்திடும்; பொய்போதம் ஒழியும், போக்குவரவு ஏதுமிலாத் தன்சொரூபத்தை இடையறாது மனம் நிற்கும், புறம்போகும், அகம்போகும், மரணம் போகும். இதை விடுத்து வேறு எது கற்றும் ஏக்கம் நம்பால் இருந்திடும்.

**72. மெய்ப்பொருளை எவ்வாறு உணர்வது?**

சுட்டி அறியப்படும் பொருள் நாம் இல்லை. சுட்டப்படாத பொருள் எதுவோ அதுவே நாம்.

**73. துன்பம் எதுவரைக்கும் நம்மைத் தொடரும்?**

உலகம் உண்டு; அதை அயல் என்று உணரும் வரைக்கும் துன்பம் நம்மைவிட்டு நீங்காது. எல்லாம் சிவமாக உணர்ந்தால் துயரம் போகும்.

**74. சிவனது செயலை எப்படி உணர்வது?**

எல்லாச் செயலும் சிவயோகம்; எல்லா நினைவும் சிவத் தியானம்; எல்லாப் பொருளும் சிவரூபம் என்று உணர்ந்தால் போதும்.






# அருள்ஜோதி அன்ன ஆலயம், கும்பகோணம்



பவானி அம்மாள்
முகப்பேர்



ஹரிபிரசாத் ராவ் சுதாராணி
கொருக்குபேட்டை





இராஜகுமாரி அம்மாள்
அண்ணா நகர்

# மரணத்தைப் போக்கும் இரகசியம்

அனன்னியமோ ஆன்மாவின் செயற்கைக் குணமான ரஜோ, தாமச குணங்களை நீக்கி கொள்ளவேண்டும். இவை மரணத்தைத் தரும். ஆனால் ஆன் மாவின் இயற்கைக் குணமான சத்துவத் தால் சிவானுபவம் பெற்று வாழ்வாங்கு வாழலாம்.

**ராஜசம் :** இராகு துவேஷ சம்பந்தமுடை யது. அத்தி களிப்புற்றிருத்தல் அகங்கா ரம் போகம் அர்த்தசேதம் கீர்த்திக் கொடை தருதலாம் (இடும்பை).

**தாமசம் :** சோம்பலாதி ஜீவ இம்சைக்கி டமாவது, நித்திரை களவு கள்ளுண்ணல் சோம்பல் வெட்டிச் சிரிப்பு முதலியவை யாகும்.

சாத்வீகம் தானாக நிற்றல், பொய்யாமை கொல்லாமை விரதமுடைமை எவரை யும் இகழாமை அடக்கமுடைமை அருவ ருக்கை பொறையுடைமையாகும்.

ஆன்மாவின் செயற்கைக் குணம் யாதெனில் இராஜசம், தாமசம் இவற்றால் ஜனன, மரணம் வரும்.

ஆன்மாவின் இயற்கைக் குணம் யாதெனில் ஆன்மாவின் அனாதி இயற்கைக் குணம் ஆணவமாகும். (அநாதி தோற்றமும் முடிவும் அற்றது). ஞானிக்கு மலமற்ற ஆணவம் உண்டு. இது தீமையற்றது. ஜீவர்களுக்கு இயற்கை யாகவே ஆணவம் இருக்கும். இதுதான் மரணத்தைத் தருகிறது. சாத்வீகத்தால் மட்டுமே சிவானுபவம் பெறலாம்.

கருணையுஞ் சிவமே பொருளெனக் காணுங்
காட்சியும் பெருக மற் றெல்லாம்
மருணெறி யெனநீ யெனக்கறி வித்த
வண்ணமே பெற்றிருக் கின்றேன். 3503 ஊஅ.

**ஆன்மஒழுக்கம் செயற்கைக் குணங்களை நீக்குதல்**

ஆன்ம ஒழுக்கமாவது– யானைமுதல் எறும்புவரை தோன்றிய ஜீவர்களினது சூக்குமம் தனித்தலைவன். ஆதலால் பர மான்மாவே பதியாய் நிற்பதாய் யாதும் நீக் கமற அந்தந்த சீவர்களின் ஜீவான்மாவே திருச்சபையாய் அதனுள் எவ்விடத்தும் பேதமற்று எல்லாந்தானாக நிற்கும்.

இவ்வண்ணம் நின்றால் மேற்குறித்த அரும் புருஷார்த்தங் கைகூடும். ஒருமை யென்பது தனது அறிவு ஒழுக்கம் ஒத்த இடத்தில் தானே கூடும். மற்ற இடத் தில், தன்னால் இதரர்களுக்கு இம்மை இல்லாது அவர்கள் செய்யினும் தான்ச கித்து அடங்கிநிற்பதாகும்.

எவ்வுயிர்த் திரளு மென்னுயி ரெனவே
யெண்ணிநல் லின்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வருமிடை யூற்றை
யகற்றியே யச்சநீக் கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்
சிவசிவ வென்றுகூத் தாடி
ஒவ்வுறு களிப்பா லழிவுறா திங்கே
யோங்கவு மிச்சைகா ணெந்தாய். –அருட்பா.

சத்தியம் செய்கின்றேன் சகத்தீ ரறிமின்கள்
சித்தியெலாம் வல்ல சிவமொன்றே– நித்தியமென்
றெண்ணுமெண்ணத் தாலே நம் மெண்ணமெலாங் கைகூடும்
நண்ணுமின்பத் தேனென்று நான்–அருட்பா

என்னுயிரு மென்னுடலு மென்பொருளும் யானே
இசைந்து கொடுத் திடவாங்கி யிட்டதன் பின் மகிழ்ந்தே
தன்னுயிருந் தன்னுடலுந் தன்பொருளு மெனக்கே
தந்துகலந் தெனைப் புணர்ந்த தனிப்பெருஞ் சுடரே
மன்னுயிருக் குயிராகியிம்பமுமாய் நிறைந்த
மணியேயென் கண்ணேயென் வாழ்முதலே மருந்தே
மின்னியபொன் மணிமன்றில் விளங்குநடத் தரசே
மெய்யுமணிந் தருள்வோயென் பொய்யுமணிந்தருளே.
–அருட்பா.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை



எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை–600011

தொலைபேசி: 9003034056, 9600040788

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com

## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மேன்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5–ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கிகாரம் பெற்ற (பதிவெண் 24/239–2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மீக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு | ரூ.2000/– |
| மதிய உணவு | ரூ.5000/– |
| **மதிய சிறப்பு உணவு** | |
| (வடை, பாயாசம் உட்பட) | ரூ.8000/– |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்

பெயர்:

முகவரி:

பதிவெண்: ________











தேனி மாவட்டத்தைச் சார்ந்த சின்னமனூரில் அமைந்துள்ள பகுதிய

**தனபால் ஐயா**

என்பவர்கள் மனம் உவந்து அவர்களின் இடத்தில் சன்மார்க்க சேவை புரிவதற்காக அளித்ததன் அடிப்படையில் அருள்ஜோதி அன்ன ஆலயமானது தொடங்கப்பட்டது





**செஞ்சி பகுதியில் அமைந்துள்ள தேவதான பேட்டை என்கின்ற கிராமத்தில் அமைந்துள்ள சன்மார்க்க சபையில் அருள்ஜோதி அன்ன ஆலயத்தின் தொண்டு தொடங்கப்பட்டு அன்று முதல் காலை பசியாற்று வித்தல் பணி நிறைவாக அளிக்கப்பட்டு வருகிறது**



# உயிரின் உரிமை

## பாவங்கள் கிலோ 200 ரூபாய்!

உயிர்களைத் தோல் உரித்து பாவங்களைக் கூறுபோட்டுக் கடைவிரிக்கிறது ஒரு கூட்டம். அதைக் கடினப்பட்டு உழைத்த காசில் அடித்துப்பிடித்து வாங்கிச் சுமந்து செல்கிறது இன்னொரு கூட்டம். இது வேடிக்கையான வேதனை தரும் விஷயம்.

திருஅருட்பிரகாச வள்ளலார் கருணைக் கடையில் புண்ணியத்தை விற்றார். வாங்கிப் பயன்பெற்றவர் வெகு சிலரே. பெற்ற பயனும் சிலவே. அவர் விரித்த கடை கருணை; விற்றபொருள் மரணமிலாப் பெருவாழ்வு. அதனை விரும்பி வாங்கிச் சென்றசிலரும் அதனைச் சரிவரப் பயன்படுத்தத் தவறினர். எனவேதான், வள்ளலார் "கடைவிரித்தேன் கொள்வாரில்லை. கட்டிவிட்டேன்" என்றார்; ஆனால், கருணையற்ற கடைகளில் பாவத்தைக் கூறுபோட்டு கிலோ 200 ரூபாய் என்று விற்கிறார்கள். அதனை அடித்துப்பிடித்து வாங்க ஒரு பெரிய கூட்டமே காத்துக்கிடக்கிறது. இவ்வாறு மனிதன் மாய வலைகளில் சிக்கி மாண்டு போவதையே அதிகம் விரும்புகிறானே! ஏன்?




காரணம், "பாவம் என்பது ஆரம்பத்தில் செய்வதற்குச் சுகமாகவும், பின் துக்கமாகவும் இருக்கும். புண்ணியம் என்பது ஆரம்பத்தில் செய்வதற்கும், முயற்சிப்பதற்கும் துக்கமாகவும், பின் சுகமாகவும் இருக்கும்" என்கிறார் வள்ளலார்.

இதன் அடிப்படையில், பிறகு வரும் துன்பத்தை இப்பொழுதே உணர்ந்து பார்க்கத்தெரியாத முட்டாள்களே இப்பொழுது கிடைக்கும் சுகத்திற்கு ஆசைப்பட்டுப் பாவம் செய்து மாயவலைகளில் சிக்கித் தவிக்கின்றனர்; பின் வரும் சுகத்தை உணர்ந்தவர்களே, இப்பொழுது கிடைக்கும் துன்பத்தைப் பொருட்படுத்தாமல் புண்ணியம் தேடுகின்றனர்.

சிலருக்குப் "புண்ணியம் செய்" என்றால், "போருக்குப் போ" என்பது போல் கடினமாகத் தோன்றுகிறது. "பாவம் செய்" என்று யாரும் சொல்லவேண்டியதில்லை. ஏனென்றால், பாவத்திற்குக் கவர்ச்சி அதிகம். பார்ப்பவரை எல்லாம் பற்றி இழுக்கும். அதில் மயங்கிவிட வேண்டாம் என்பதே முன்னோர்களின் முன்னுரை.

பாவத்தில் கொடியது ஓர் உயிரைக் கொன்று தின்பது; அதைப் பார்க்க நேரிட்டாலும் பயந்து நடுங்கு என்பதுதான் மகான்களின் வாழ்வும், வாக்கும் நமக்கு உணர்த்துகிறது.

# அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள்



திரு.இரவிசந்திரன் ஐயா



திரு.முத்துராஜ் ஐயா



திரு.ஐயப்பன் ஐயா



திரு.ஞானபிரகாசம் ஐயா



திரு.ஜெகதீசன் ஐயா



திருமதி. சந்தானலட்சுமி அம்மா



செல்வி.ஜெயஸ்ரீ



திரு. ப.ஐயப்பன் ஐயா

**மேற்கண்ட படங்களில் உள்ளவர்கள் நமது அன்ன ஆலய சேவாதாரிகள், மற்றவர்கள் அன்ன ஆலய பெயரை உபயோகப்படுத்தினால் கீழ்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

**90030 34056**

# அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு தொண்டு அளிப்பவர்களின் அனுபவங்கள்

எங்களது பெயர் எஸ்.தெய்வசிகாமணி சாவித்திரி, நாங்கள் பம்மல் என்கிற ஊரில் வசித்து வருகிறோம். நாங்கள் கடந்த 10 வருடமாக அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு எங்களால் இயன்ற காணிக்கையை மாதந்தோறும் அளித்து வருகிறோம். எனது குடும்ப சூழ்நிலையின் நெருக்கடியில் அன்ன ஆலயத்திற்கு காணிக்கை அளிப்பது ஆறுதலை தருகின்றது. மனிதர்களாகிய நாம் எதையாவது செய்ய வேண்டும், பயனுள்ளதாக இருக்க வேண்டும், வாழ்க்கையில் ஒரு நோக்கத்தை கொண்டிருக்க வேண்டும், இவ்வுலகிற்கு ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும், என்ற எண்ணம் என் மனதில் எழ ஆரம்பித்ததில் இருந்து நோயற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தர்மம் செய்வது பெரிது அல்ல. நமக்கு இறைவன் ஏதாவது ஒரு வாய்ப்பை கொடுக்கிறான் என்றால் அது நமக்கு கிடைத்த பாக்கியமாக நான் நினைக்கிறேன். ஒன்று மட்டும் சொல்கிறேன் தர்மம் பெறுபவரை விட தர்மம் கொடுப்பவருக்கு தான் பணிவு அதிகமாக இருக்க வேண்டும். ஏனென்றால் இந்த வாய்ப்பை நமக்கு இறைவன் கொடுத்திருக்கிறார். இறைவன் எவ்வளவு கருணையாக என்னை பெறுபவராக அல்லாமல் கொடுப்பவராக வைத்திருக்கிறார்.

# அருள்ஜோதி அன்னஆலயத்திற்கு தொண்டு செய்யும் அன்பர்களின் ஆனந்த அனுபவங்கள்




எனது பெயர் கணேசன். என் மனைவி பெயர் தேவி நாங்கள் கடந்த 6 மாத காலமாக அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு தொண்டு செய்து வருகின்றோம்.

நாம் துயர படும்போது நம்மை, நம்மிடம் அன்பு காட்ட ஆளில்லை, நாம் தனி மனிதன், ஆதரவற்ற ஓர் அனாதை என்று வருத்தமுறும் நிலையில், என்றோ, எங்கோ, எப்படியோ, யாருக்கோ, எந்த வடிவிலோ, காட்டிய அன்பின் அடையாளம், உதவிக்கு வருமானால், மனம் எவ்வளவு ஆறுதல் அடையும் என்பதை என்னுடைய அனுபவத்தின் மூலமாக உணர்ந்தேன். சிறு வயதிலிருந்தே வள்ளலாரின் பக்தை நான். கடந்த 6 மாதமாக அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு என்னால் இயன்ற அளவிற்கு, பொருளுதவியாகவோ, பண உதவியாகவோ தொண்டு செய்து வருகிறேன்.

அருள் ஜோதி அன்ன ஆலயத்தின் உறவு எனக்கு கிடைத்ததை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன் குழப்பங்களும், சண்டைகளும் நிறைந்த எங்களுடைய வாழ்க்கையில் அருள்ஜோதி அன்ன ஆலய தொடர்பு எப்பொழுது கிடைத்ததோ, அப்பொழுதே வாழ்வின் பயனை முழுமையாக அடைந்தது போல் இருக்கும். எனது நோக்கம் பசித்தவர்கள் புசிக்க வேண்டும் என்பதுதான். அதை நான் தனியாக செயல்படுத்த முடியாத நிலையில் தயவுத்திரு தனலட்சுமி அம்மா அவர்கள் மூலமாக, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள் ஆசிர்வாதத்தினால், ஒவ்வொருவருடைய ஆசையையும் சிறப்பாக செய்து கொடுத்து மக்கள் அனைவரையும் புண்ணியத் தொண்டில் ஈடுபட செய்வித்து பெறும் பணியாற்றி வருகின்ற அம்மா அவர்களுக்கு மிக்க நன்றி.

# அருள்ஜோதி தொலைக்காட்சி பார்த்து மகிழும் உள்ளங்களின் அன்பான வார்த்தைகள்



என் பெயர் உதயகுமார், நான் சென்னை வியாசர்பாடியில் வசிக்கின்றேன். என் மனைவி பெயர் அபிராமி எனக்கு 2 மகள்கள். அருள்ஜோதி தொலைக்காட்சியை என் இல்லத்தில் தெரிய வைத்ததற்கு அருள்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கும், வள்ளல் பெருமானாருக்கும், சதீஷ் ராஜ் ஐயா அடிகளார் அவர்களுக்கும், தயவு தனலட்சுமி அம்மா அவர்களுக்கும். இந்த செயல்பாட்டிற்கு காரணமாக இருக்கின்ற அனைத்து நல் உள்ளங்களுக்கும், என் குடும்பத்தின் சார்பாக உங்கள் திருவடிகளுக்கு கோடான கோடி நன்றி.

அருள்ஜோதி தொலைக்காட்சியை பார்க்கும் முன்பு நான் மது அருந்துவேன், மாமிசம் உண்ணுவேன், புகைபிடிப்பேன். இந்த பழக்கத்தால் என் உடலில் சில நோய்கள் வந்துவிட்டது. அதிகமாக கோபமும் வரும் இதனால் என் இல்லத்தில் அடிக்கடி சண்டை நடக்கும். நிம்மதியின்றி வாழ்ந்து கொண்டிருந்தேன். இந்நிலையில் அருள்ஜோதி தொலைக்காட்சியை பார்த்த பிறகு அதில் காட்டும் உயிர் இரக்கம் நிகழ்ச்சியைக் கண்டு அப்போதே நான் மாமிச உணவை விட்டுவிட்டேன். அதன் பிறகு அருள்ஜோதி தொலைக்காட்சியில் வரும் நிழ்ச்சிகளையும் பார்க்க ஆரம்பித்தேன். மேலே குறிப்பிட்டுள்ள தீய பழக்கங்களை விட்டுவிட்டேன். இப்போது நான் உடல் ஆரோக்கியமாக இருக்கின்றேன். என் குடும்பமே சைவமாக மாறிவிட்டார்கள். இன்றைக்கு எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும், ஆனந்தமான வாழ்க்கையை வாழ்ந்துக்கொண்டிருக்கின்றோம். ஆகையால் இந்த உலகமே அருள்ஜோதி தொலைக்காட்சியைப் பார்த்து ஆனந்தமாக வாழ வேண்டுமென்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் நாங்கள் பிரார்த்தனை செய்கின்றோம்.

# அருள்ஜோதி புத்தகம் வாசிக்கும் அன்பு உள்ளங்களின் ஆனந்த அனுபவங்கள்

எங்களது பெயர் லீலா கிருஷ்ணன். நாங்கள் சென்னை வெற்றி நகரில் வசித்து வருகிறோம். எங்கும் தொலைக்க முடியாத ஒரு பொக்கிஷம் போன்றது, அருள்ஜோதி புத்தகம். நெஞ்சில் எப்போதும் நின்றாடும் இனிப்பை போன்றது. இழக்கமாட்டாத நட்பு அது. அருள்ஜோதி புத்தகமானது, எனது அலுப்பை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் பகிர்வைக் கொண்டு வந்து நடுகிறது. கசப்பை உறிஞ்சி எடுத்தபடி நம்பிக்கையால் நிரப்புகிறது. அன்றாட வாழ்க்கையின் வேதனை பளுவையே சுமக்க திணறுகிற மனிதர்களை ஆசுவாசப்படுத்தி, தனது கைகளைக் கொண்டு அழைகீழ் இறக்கி வைக்க உதவி, பின்பு நானே இளைப்பாறி, அதைக் காட்டிலும் பல மடங்கு பளுவைக்கூட முக இறுக்கமின்றி சுமந்து செல்ல பழக்குகிறது புத்தகம். நான் படித்து புரிந்துக் கொண்டு எனக்கு கடவுள் உணர்த்துகின்ற அனைத்து விஷயங்களையும், எனது வீட்டின் அக்கம் பக்கத்தினர்கள் அனைவருக்கும் எடுத்துரைப்பேன். எனது நேரத்தை பயனுள்ளதாக மாற்றிய அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் வெளியிடுகின்ற அருள் ஜோதி புத்தகத்திற்கு நன்றி.

## ஓவியங்கள்:

5 முதல் 15 வயது வரை உள்ள மாணவ–மாணவிகளிடமிருந்து எனக்கு பிடித்த சைவ பிராணிகள் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

## இளைஞர் கட்டுரைகள்

சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்க கட்டுரைகள், மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைப் படத்துடன் பிரசுரிக்கப்படும்.

குறிப்பு:

**நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற தாங்களும், தங்களின் அனுபவத்தை நமது இல்லத்திற்கு வருகின்ற சேவதாரிகளிடம் தாங்கள் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற அனுப வத்தை பகிர்ந்து கொண்டு பதிவு செய்வதன் மூலமாக தங்களின் அனுபவமானது அருள்ஜோதி புத்தகத்தில் வெளியிடப்படும்.**

# வள்ளலார் வரலாறு

## (மாணவர்களுக்கான ஒருவரி வினா-விடை)

101. அன்றாடத் தேவைக்கென அரைரூபாய் முடிந்துத்தந்தது யாருக்கு?
வடலூர் அமாவாசை என்ற அன்பருக்கு.

102.வீடு எரிந்தபோது ஆடையால் வீசி நெருப்பை அணைத்தது எங்கு ?
புதுப்பேட்டையில்.

103.வள்ளலார் அமைத்த இறை வழிபாட்டிடத்தின் பெயர் என்ன?
சத்திய ஞானசபை.

104.சத்தியஞானசபை எங்குக் கட்டப்பட்டுள்ளது?
வடலூர் சத்தியதருமச் சாலையின் வடமேற்கில்.

105.எப்போது கட்டத் தொடங்கப்பட்டது?
1871 ஆனி மாதம்.

106.எப்போது கட்டி முடிக்கப்பட்டது ?
1872 தை மாதம்.

107.சத்தியஞானசபை எந்தவடிவில் கட்டப்பட்டுள்ளது ?
எட்டுக் கோணவடிவில் தாமரைப்பூ பூத்தது போல.


108.இதற்கான வரைபடம் யாரால் வரையப்பட்டது ?
வள்ளலாரால்.

109.சபைக்காகக் கொடிமரம் வாங்க, சென்னை சென்றவர் யார்?
வேலூர் ஆறுமுகம்.

110. எந்த மரத்தைத் தேர்ந்தெடுத்தார் ?
எந்த மரத்தில் வள்ளலார் நடந்துகொண்டிருந்தாரோ அந்த மரத்தை.

# நாங்கள் கொல்லா விரதம் மேற்கொண்டுள்ளோம் நீங்கள் எப்படி?

நாங்கள் பலசாலிகள், தூய்மையானவர்கள், நாங்கள் தாவர உணவையே உண்கிறோம்.




-- யானை

எனக்கு கேரட், முட்டைக்கோஸ், முள் ளங்கி மற்றும் புல் மிகவும் பிடிக்கும். நான் நிச்சயமாக சைவம்.



---- முயல்

நான் உண்பது தாவர உணவு மட்டுமே.




-- வரிக்குதிரை

என்னால் பாலை வனத்தில் நெடுந்தூரம் சுலபமாக நடக்க முடியும். நான் தாவர உணவையே உண்கிறேன்.



---ஒட்டகம்

என்னைப்போல் யாரும் கிடையாது. என்னுடைய நீண்ட கழுத்தினால் உயரமான மரங்களில் உள்ள இலை, காய்களை சுலபமாக சாப்பிடுவேன். நான் சுத்த சைவம்.




--- ஒட்டகச்சிவிங்கி



நாங்கள் காட்டில் குழுக்களாக வாழ்கிறோம் நாங்கள் சுத்த சைவம்.

---- மான்




நாங்கள் நல்ல பால் தருகிறோம். நாங்களும் கூட சுத்த சைவம் தான்.

---- மாடு



நாங்கள் இலைகளையும், புற்களையும், பருத்தியையும், சாப்பிடுகிறோம். நாங்கள் சுத்தம் சைவம்.

---- ஆடு



நான் பலசாலி மற்றும் வேகமாக ஓடுவேன். என் பெயராலேயே வேகம் அளக்கப்படுகிறது. நான் தாவர உணவையே உண்கிறேன்.

-----குதிரை



என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நான் கடும் சுத்த சைவம்.

---அணில்

# இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் தோற்றுவாய்

புனைமுகமோர் களிமுகமாய்ப் பொங்கிநின்றாள் பாங்கி
புழுங்குமனத் தவளாகி அழுக்குகின்றான் செவிலி
பனையுலர்ந்த ஓலையெனப் பெண்களொலிக் கின்றார்
பண்ணவரென் நடராயர் எண்ணமறிந் திலனே'

போத நிலையில் சிவம் சோதிவடிவாகத் தோன்றும். அச்சோதி தரிசனம் பெறப்பெற உயிர்க்கு இன்ப உணர்வு பெருகிக்கொண்டே போகும். அப்போதத்தில் நிலைத்து நிற்போர் கீழ்நிலைகளில் வீழ்ந்து இடர்ப்படுதல் அருமை. ஆண்டிருந்து அவர் மேலே இவர்ந்தே செல்வர். அங்கேதான் கரந்தம் இரும்பை ஈர்ப்பதுபோலச் சீவனைச் சிவன் ஈர்த்தல் திகழும். சீவன் சிவனைச் சிக்கெனப் பிடித்துக்கொள்வான். சிவாட்டமன்றி வேறு நாட்டம் சிவனுக்குறாது. சோதியே சுடரே சூழொளி விளக்கே என்று ஆண்டவனை விளித்துச், 'சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவ தினியே' என்று மாணிக்கவாசகனாச் அருளியது ஈண்டுப் பெரிதும் உன்னறபாலது.

போத நிலையில் பொலிவுறும் அருட்சோதியைப் பற்றி யும், அதனால் விலையும் இன்பத்தைப் பற்றியும் இராமலிங்க சுவாமிகள் அருளிய பாக்கள் பலப் பல. அவைகளுள் சில வற்றை ஈண்டு எடுத்துக்காட்டுகிறேன்.

கொழுந்தேனுஞ் செழும்பாகுல் குலவுபசும் பாலுங்
கூட்டியுண்டாற் போலினிக்குல் குணங்கொள்முடிக் களியே
தொழுந்தேன மடத்தையர்க்கு மங்கலகாண் கழுத்தில்
தோன்றவிடம் கழுத்திலுன்னே தோன்றிகின்ற சுடரே
எழுந்தேறு மன்பருளத் தேற்றுதிரு விளக்கே
என்னுயிர்க்குத் துணையேயென் னிருகண்ணுண மணியே
அழுந்தேற அறியாத அவலசெஞ்சம் அந்தோ
அபயமுனக் கபயமெனை யாண்டருன்க விரைந்தே



'ஜோதி மலையிற் கண்டே ளின்னைக் கண்க னிக்கவே
துய்த்தே னமுதம் அகத்தும் புறந்தும் பரிம ளிக்கவே
ஓதியுணர் தற்கரிய பெரிய உணர்வை எண்ணிவே
ஓதர தனைத்தும் உணர்கின் நேளின் அருளை எண்ணியே

'எண்ணூர்தோறும் எண்ணும் தோறும் என்னுள் ருனிக்குதே
இறைவ நின்னைப் பாட காலில் அழகஞ் சனிக்குதே
கண்ணுங் கருத்து பின்பா லன்றிப் பிறர்பாற் செல்லுமோ – தொடரும்



**கண்டே னுன்னை இனிமே லென்னை மாயை யெல்லுமோ**

**இறுகப் பிடித்துக் கொண்டேன் பதத்தை இனிநான் விருகனே**
**எந்தாய் பாதம் பிடித்த கையால் வேறு தொடுவனே**
**குறுப் பயந்து கூற்று மோடிக் குவைந்து போயிற்றே**
**கோவே யுன்றன் அருட்சிற் சோதி என்ன தாயிற்றே'**

**'நீயே வலித்தின் சென்னை யாண்ட நீதிச் ஜோதியே**
**நின்னைப் பாட என்னை வளர்க்கு நீமலச் ஜோதியே**
**தாயே யெனவர் தென்னைக் காத்த தருமச் ஜோதியே**
**தன்மை பிறரா லரிதற் கரிய தலைமைச் ஜோதியே'**

**'ஈசனரு ளாற்கடலி லேற்றதொரு வோடம்**
**எதிக்கரை யேறினே னிருந்ததொரு மாடம்**
**தேசுறுமம் மாடநடுத் தெய்வமணிப் பீடம்**
**தீபவொளி கண்டவுடன் சேர்ந்ததுசர் தோடம்**

இச் சோதிதரிசனம் பின்னை இறவாநிலை கூட்டுவ தொன்றாகலான், இதனைப்பற்றிப் பாடிய அளவில் சுவாமி கள் நின்றார்களில்லை. அச்சோதியை மக்கள் வரயார வாழ்த்தி வாழ்த்தியும்,கண்ணூரக் கண்டு கண்டும் மனத் திற்கொள்ளச் சில முறைகளையுஞ் சுவாமி கள் வகுத்தார்கள். அம்முறை களுள் மூன்று சிறப்பாகக் குறிக்கத்தக்கன. ஒன்று, அருட்பெ ருஞ் சோதி தனிப்பெருங் கருனை என்னும் முழக் கம். மற்றொன்று வடலூர் சபையில் பூச நாளில் சோதிக் காட்சி வழங்கல் ; இன் னொன்று மேட்டுக்குப்பத்தில் என்றும்

எரியும் விளக்கு. இச்சோதியை நினைத்த லும், சொல்லலும், வணங்கலுமே சுவாமிகள் கோலிய வழிபாட்டுமுறை என்றுங் கூறலாம்.

நமது நாட்டின் விளக்கைக் கண்டதும் தொழும் ஒரு வழக்கமிருத்தல் உங்கட்குத் தெரியும். அதன் நுட்பம் என்னை? போத நிலையில் விளங்குஞ் சோதியை நினைப்பூட் டும் அறிகுறியே யாகும். 'ஓசை ஒலியெலாம்' என்னுந் திருக் தாண்டகத்தில், 'தேச விளக் கெலாம் ஆனாய் நீயே என்றும், 'திருவையா றகலாத செம்பொற் சோதி' என்றும் அப்பர் சுவாமிகள் அருளிச் செய்ததை உன்னுக. சோதி நினைவு அருகிய இந்நாளில், சுவாமி கள் அதனைப் பெரிதும் பலவழியில் வலியுறுத் திச் சென்றார். இச்சோதி வழிபா டாதல் நாட்டில் பெருகுவதாக.

முதல் முதல் சோதி தரிசனம் நிகழும் இடம் புருவ மத்தி என்று யோக நூல்கள் கூறும். அவ்வி டத்தைக் குறிக்கவே நம் நாட்டார் சந்தனம் முதலியவற்றான் பொட் டிடுதலுமுண்டு. சுவாமிகள் அப் புருவமத்தியைச் சுட்டிம் பாடிய பாக்களில் இரண்டொன்றைப் பார்ப்போம் :

அணித்தபர நாதமுடித் தலத் தின்மிசைத் தலத்தே தலைவரெ லாம் வணங்கமின்ற தலைவனட ராஜன் இனித்தசுக மறிந்துகொளா இளம்பருவந் தனிலே என்புருவ நடுவிருந்தான் பின்புகண்டே னில்லை அணித்தமிலா இச்சரிதம் யார்க்குரைப்பே னக்கோ அவன றிவான் நானறிவேன் அயலறிவா முன்ரோ துணித்தாலை விடுத் தொருகாற் சுத்தலை அதனில் சுகங்கண்டும் விடுவேனோ சொல் லாயென் தோழி < கண்களிக்கப் புகைசிறிதுக் காட்டாதே புருவக் கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே பண்களிக்கப் பாடுகின்ற பாட்டில்வினை சுகமே. பத்தருனே தித்திக்கப் பழுத்தாணிப் பழமே

# வள்ளல் பெருமானின்

# வரிகள் கூறும் ஒரு அற்புதக் கதை


**இந்தக் கதையை புரிந்துக்கொண்டால் நமது வாழ்வை புரிந்து கொள்வது எளிது**

ஒரு வறட்சியான காட்டிலே நிறைய மரங்கள் இருந்தன. வறட்சியால் மான்கள் எல்லாம் வாடின. உணவுக்காகவும், தண்ணீர்க்காகவும் காடு முழுக்க அடைந்தன. அந்த மான்களை ஒரு வேடன் பார்த்தான். அந்த மான்கள் அனைத்தையும் பிடிக்க வேண்டும் என்று நினைதது ஒரு பெரிய இடத்தை தேர்ந்தெடுத்து அந்த இடத்தில் புற்கள் நிறைந்திருக்கும்படி அமைக்கின்றான். அந்த பெரிய இடத்தை சுற்றி மான்கள் அறியாதவாறு வேலி அமைத்து மான்கள் உள்ளே வர சிறு வழியையும் வைக்கின்றான். அங்கே மான்கள் தொடர்ந்து வர ஆரம்பிக்கின்றன. எல்லா மான்களும் உள்ளே வந்த பிறகு சிறு வழியையும் அடைத்து விடுகின்றான்.

ஆனால் மான்கள் இது பற்றி ஏதும் அறியாமல் மகிழ்ச்சியாக வாழ்ந்தன. தினமும் அந்த வேடன் வந்து தினம் ஒரு மானை பிடித்து செல்கின்றான். இதனை ஒரு மான் பார்த்து விடுகிறது, மற்ற மான்களிடம் நாம் ஒரு வேடன் விரித்த பெரிய வளையில் அகப்பட்டுவிட்டோம். எனவே நாம் இறந்து விடுவோம், வாறுங்கள் நாம் இங்கிருந்து தப்பிக்கலாம் என்று எல்லா மான்களையும் அழைக்கிறது.

ஆனால் அங்கு உணவு, தண்ணீர் எல்லாம் கிடைப்பதால் அங்கிருந்து எந்த மானும் வெளியே செல்ல விரும்பவில்லை. இவன் ஏதோ உலருகிறான் என்று புற்களை மேயத் தொடங்கின. இந்த மான் அங்கும், இங்கும் ஓடி வழியைத் தேடியது. மற்ற மான்கள் எல்லாம் இந்த மானுக்கு ஏதோ பைத்தியம் பிடித்து விட்டது என்று நினைத்தது. அப்போது ஒரு முயல் ஒரு பாதையில் வெளியே ஒடுவதைப் பார்த்தது அந்த மான். அந்த முயலை பின் தொடர்ந்ததன் பயனாக மானுக்கு ஒரு வழி தெரிந்தது. அந்த வழி நுழைந்து செல்வதற்கு மிக கடினமாக இருந்தது. இருப்பினும் அந்த மான் முயற்சி செய்து அதனுள் நுழைந்து சென்றது. அங்கே பெரிய பூங்காவனம் எல்லா வசதிகளுடனும் இருந்தது. இதனைக் கண்டவுடன் அந்த மானுக்கு மிகுந்த மகிழ்ச்சி. இங்கே நமக்கு துன்பம் என்பதே இல்லை முழுவதும் இன்பமயம் என்று மகிழ்ந்தது. அங்கே, வேடன் வளையிலே சிக்கி அறியாமையில் இருக்கும் அந்த மான்களை எல்லாம் இங்கே அழைத்து வந்துவிட வேண்டும். எல்லா மான்களும் இந்த இன்பத்தை பெற வேண்டும் என்று நினைத்தது. எனவே மீண்டும் அந்த வேடன் வளைக்குல் சென்றது. எல்லா மான்களிடமும் நாம் ஒரு வேடன் வளைக்குள்ளே இருக்கின்றோம்.

தப்பிக்க அங்கே ஒரு வழி இருக்கின்றது. அந்த வழியை தாண்டி



சென்றால் இதைவிட ஒரு பெரிய பூங்கா வனம் இருக்கிறது அங்கே சென்றால் நமது பயம், துன்பம் எல்லாம் நீங்கி ஆனந்தமாக வாழலாம் என்று அழைக் கின்றது. ஆனால் எந்த மான்களும் கண்டு கொள்ளவே இல்லை.

ஒரு சில மான்கள் வந்து அந்த வழியை பார்த்து இந்த வழிக்குள் நுழைவதா? இது மிகவும் கடினம். நாங்கள் இங்கேயே இருக்கின்றோம் என்று திரும்பி வந்து விட்டன.

ஒரு சில மான்கள் திரும்பி செல்ல வும் மனம் இல்லாமல், அந்த வழியில் நுழையவும் முடியாமல் அங்கேயே நின்று வழியையே பார்த்துக்கொண்டிருந்தன.

அப்பொழுது அந்த மான் அந்த பூங்கா வனத்தின் அற்புதத்தையும், அதனுள் செல்லும் பாதையின் விளக்கத்தையும், கூறி விட்டு அந்த பாதையின் வழியே பூங்காவ னத்திற்கு சென்றது. மற்ற மான்கள் அங்கு நின்று அந்த மான் செல்வதையே பார்த் துக் கொண்டிருந்தது.

இந்த கதையில் அந்த வறட்சியான காடு தான் ஆணவம். வறட்சியில் வாடும் மான்கள் ஆனவத்தில் கட்டுண்ட ஆன் மாக்கள். அங்கே வந்த வேடன் மாயை. அவன் விரித்த பெரிய வலை உலகியல் வாழ்க்கை.

அங்கே கிடைக்கும் உணவு தண்ணீர் எல்லாம் உலகியல் போகங்கள். வறட்சி யால் தவித்த மான்களுக்கு, அந்த வளைக் குள் கிடைத்த உணவும், தண்ணீரும் வரம்.

ஆனால் நம் வளைக்குள் இருக்கின் றோம் என்று அறிய மறந்ததினால் அதுவே சாபமாகிறது.

அதுப்போல் இந்த உலகியல் வாழ்க்கை களும், உலகியல் போகங்களும் நாம் நல் லறிவைப் பெற்றுக்கொள்ள கிடைத்த வரம். ஆனால் அதனைக் கொண்டு நல் அறிவைப் பெற்றுக்கொள்ள மறந்ததினால் அந்த வரமே சாபமாகிறது.

வளைக்குள் அகப்பட்ட மான் அதில் உள்ள புற்களை மேயாமல் எப்படியா வது தப்பித்தால் போதும் என்று கலங்கி அங்கும், இங்கும் ஓடும் அதைப்போல ஞானிகள், இந்த அற்ப சுகத்தை விரும்பா மல் இதனை விட்டு வெளியேரவே விரும் புவார்கள்.

வெளியேறிய பாதையைக் காட்டிய முயலே திருவருளின் துணை. வெளியேறு வதற்கான பாதையைக் கண்டு பூங்காவை அடைத்ததற்கான மானே, சுத்த ஞானி.

அந்த மான் சென்ற பாதையே கருணை. கருணை இல்லாதவருக்கு கடுமையான பாதையும் கடினமாகத் தெரிகிறது.


கருணையாளர்களுக்கு, கருணையே பாதையாக இருக்கிறது.

அந்த பாதையின் வழியே சென்றடைந்த பூங்காவனமே பேரின்ப பெருவாழ்வு. பூங்காவனத்தை அடைந்த மான், கருணை யால் மற்ற மான்களை அழைத்தது போல் தான், சுத்த ஞானிகள் கருணையினால் நம்மை அவர்களைப் போல் பேரின்பம் பெற அழைக்கின்றார்கள்.

நான் பெற்ற நெடும்பேற்றை ஓதி முடியாது. என் போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே என்பார் வள்ளல் பெருமான்.

வலைக்குள் மாட்டிக்கொண்டோம், நாம் சாகப்போகின்றோம் என்று அறி யாமையே வலைக்குள் உள்ள புற்களே சுகம் என்று உண்டு அங்கேயே இருந்து வேடனின் கையால் மடிந்து போகும் மான்களே, இந்த உலக போகமே சுகம் என்று வாழ்ந்து மடியும் பக்குவம் இல்லாத ஆன்மாக்கள். நம்மில் பலர் வலைக்குள் அகப்பட்டு விட்டோம் என்று தெரிந்து கொள்ள விரும்பாமல் அஞ்ஞானத்திலும், பலர் தெரிந்தும் இந்த வலையே சுகம் என்று கருதி, வலைக்குள் உள்ள புற்க ளாகிய உலகியல் போகங்களை விரும்பி அஞ்ஞானத்திலும் உழல்கின்றோம்.

இந்த மயத்திற்கு பெயரே உலகியல் மயக்கம்.



## திருவருட்பா ச.மு.க வெளியீடு - 1924

காரணப்பட்டு, ச.மு.கந்தசாமி பிள்ளையவர்கள் மாயவரம் துலாஸ் நானத்திற்குச் சென்ற போது மாயவரம் – வித்துவான் நடராஜ பிள்ளையுடன் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் செல்ல, அவர் கந்தசாமி பிள்ளையைப் பார்த்து “கையிலுள்ளது என்ன புத்தகம்” என்று கேட்க, கந்தசாமிபிள்ளை “திருவருட்பா” என்றனர். உடனே மகாவித்வான் அதனைப் பெற்று மகாதேவமாலையில் “கருணை நிறைந்து” எனும் முதற்பாசுரத்தை அங்குள்ள வித்வான்களிடம் காட்டிப் பொருள் விளக்கும் படி கேட்டனர். ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றிய நயங்களை எடுத்துக் கூறினர். மகாவித்வான் எழுந்து திருவருட்பாவைத் தன்தலை மீது வைத்துக் கொண்டு போற்றித் துதித்து ஆனந்தித்திருப்பதே அப்பாடலுக்கு உரை என்றார்.

ச.மு.க. சரித்திரம் ப : 54



தற்போது காரணைப்பட்டு கந்தசாமி
சமாதி
தோற்றம் : 07 – 09 – 1838
பரிபூரணம் : 02 – 12 – 1924



# வள்ளலார் நமக்காக அருளிய கரிசாலை பொடியின் பயன்கள்

கரிசாலை என்ற பெயர் கொண்ட இது ஒரு தெய்வீக மூலிகை என்பது வள்ளல் பெருமான் கூறுகிறார். ஏனெனில் இதை தினந்தோறும் பயன்படுத்துவதால் பித்தம் மற்றும் கபத்தை வெளியேற்றி உடம்பை நீடிக்க செய்யும். உள்ளொளியை பெருக்கும் வல்லமை பெற்றது. தினந்தோறும் கரிசாலைப் பொடியினை சூடான நீரில் கலந்து அருந்துவது நல்ல பலனை தரும்.

## திரிபலா பொடி தரும் நன்மைகள்

திரிபலா பொடியை இரவில் சாப்பிட்டால், நன்மைகள் ஏராளமாக கிடைக்கும். அதை மனதில் கொள்ளவும். இதில் உள்ள ஆன்ட்டி ஆக்ஸிஜன்கள், உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. உணவுப் பாதை நச்சுப் பொருட்களை நீக்கி குடல் இயக்கத்தைச் சீராக்குகிறது.

## கூட்டு சூரணப்பொடி தயாரிப்பது எப்படி

மஞ்சள் கரிசலாங்கண்ணி பொடி ---100 கிராம்

தூதுவளை பொடி ---25 கிராம்

முசுமுசுக்கைப் பொடி-- 25 கிராம்

வறுத்த சீரகப்பொடி –25 கிராம்

இந்த 4 மூலிகைப்பொடியும் வள்ளலார் நமக்காக அருளியவை.

முதலில் கரிசாலைப்பொடியை எடுத்து, பிறகு 25 கிராம் தூதுவாளைப் பொடி, அடுத்து 25கிராம் முசுமுசுக்கைப்பொடி, கடைசியாக சீரகப்பொடி 25கிராம் எடுத்து ஒன்றாக கலந்து கொள்ளவும். அதிலிருந்து ஒரு 200 மி.லி பொடியை எடுத்து பாலிலோ, அல்லது சுடுதண்ணீரிலோ கலந்து தினமும் காலையில் குடித்து வரலாம். சர்வலோக நிவாரணியாக இது வேலை செய்யும். உடலில் உள்ள ஒட்டுமொத்த கழிவுகளையும் வெளியில் கொண்டு வரும். எனவே இந்த பொடிகளை சைவமாக இருந்து கொண்டு உடலுக்கு எடுத்து வரும் பொழுது நல்ல மாற்றத்தை காணலாம்.



சீகாழி.கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த

# ஒழிவில் ஒடுக்கம்

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் உரையிலிருந்து வினா–விடையாக
தொகுத்தவர். ஜோதி.வீ.கோட்டீஸ்வரன், காஞ்சிபுரம்.

**16. ஆலிங் கனத்திலே ஐந்தினையும் பாடுவோன்**
**மாலின்ப வாரி மறிதிரைபோற்–காலப்பூக்**
**கிண்கிணிவாய்ச் செய்ததுபோல் கின்னரிப்பாட்(டு) உல்லாசம்**
**கொண்டவர்போல் கண்டவர்க்கு ஆகும்.**

★ ஒருவன் இந்நூல் கேட்கும் (முறைமை) அல்லது இலக்கணம் யாது? உதாரணம் காட்டி விளக்குக?

மாதற் கூட்டுறவால் செய்யும் ஐவகை ஆலிங்க னத்தால் வரும் இன்பம் ஐந்திணையும் அனுபவித் தறிந்து ஒருவன் கூறிய பாட்டினைப் பாடும் ஓர் காமுகனுக்கு, அக்கவியின் பொருள் கண்டு அவ்வின் பம் பெற்றான் போன்று, ஊத்தின்கண் அம்மயக்க இன்பவாரி எழுந்து அலை மறிவது போலும்;



உதய காலத்தில் தாமரை அரும்பு கிண்கிணிவாய் மலர்ந்தது போலும் மற் றொன்றினையும் கேளாது ஒருவன் பாடும் கின்னரிப்பாட்டு ஓசையை உல்லாசமாய் கேட்பவர் போலும்; ஞானம் உண்டாகும் என்பதின் இலக்கணம் கூறப்பட்டது.

**ஆலிங்கனம்= பரிச பேதத்தால் எழும் சுகம்**
**விடன்= காமுகன்**
**கிண்கிணிவாய் = சலங்கை போன்று**
**மாறிதிரை =உள்ளத்தில் இன்பம் மென்மேல் எழுதல்**
**கின்னரிப்பாட்டு = ஒருவகையாழ்**

**17. வணங்கா வுரைக்கு வணக்கமிலை தீங்கை**
**வணங்கிவாழ்த்(து) என்னில் வளமியா – வணங்குகினும்**
**எல்லார்க்கும் நன்றாய் இருப்பதிலை யாதோன்றும்**
**எல்லாருக்கும் பொல்லா(து) இலை**

★ இந்நூலின் ஆசிரியர் அவையடக்கம் கூறும் முறைமையாது? விளக்கிக் கூறு?

தற்போதம் அடங்காது ஏமாப்பால் கூறும் நூலுக்கு அடக்கமே இல்லை.

தீமைகளை செறித்து ஓர் நூலாக்கி அதற்கு அவைய டக்கம் கூறி இதனை இகழாது புகழுங்கள் எனின், அதனால் வரும் நன்மை ஒன்றுமில்லை;

நன்மைகளைச் செறித்து ஓர் நூலாக்கி அதற்கு அடக்கம் கூறினும் யாவருக்கும் நன்றாக இருப்பதில்லை; அதுபோல் மற்ற எந்நூலாயினும் யாவருக்கும் பொல் லாங்காய் இருப்பதுமில்லை;

பல நூல்களின் ஆசிரியர்கள் அவை யடக்கம் பலவிதமாக இருத்தலின் நான் எவ்வாறு கூறுவதென்று இந்நூலாசிரியர் குறிப்பால் அவையடக்கம் கூறியவாறு காண்க.

# வள்ளலாரின் புத்தகங்கள்

| | |
|---|---|
| 1.HOW SOUL BECOME LIGHT | - ரூ.120 |
| 2.சத்திய ஞானசபை தத்துவ விளக்கம் | - ரூ.80 |
| 3. THE JOURNAY | - ரூ.50 |
| 4.திருவருட்பிரகாச வள்ளலார் வாழ்வில் நடந்த அற்புதங்கள் | - ரூ.20 |
| 5. வள்ளலார் வரலாறு (வினா-விடை) | - ரூ.30 |
| 6. திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய உபதேசங்கள் | - ரூ.10 |
| 7. திவ்ய ஒளி | - ரூ.50 |
| 8. அருட்குறள் | - ரூ.50 |
| 9. ஐந்தாம் திருமுறை | - ரூ.200 |
| 10. ஆறாம் திருமுறை | - ரூ.150 |
| 11. சாகாநிலை சத்திய வாழ்வு | - ரூ.50 |
| 12. சுத்த சன்மார்க்கம் வினா-விடை | - ரூ.30 |
| 13. நாளந்தாதி | - ரூ.40 |
| 14. அகவல் பாராயண திரட்டு (சிறியது) | - ரூ.15 |
| 15. அகவல் பாராயண திரட்டு (பெரியது) | - ரூ.30 |

# மூலிகை மருந்துகள்


| | |
|---|---|
| 1. கூட்டுசூரணம் (50கி) | - ரூ.60 |
| 2.கரிசாலை (50கி) | - ரூ.60 |
| 3.திரிபலா (50 கி) | - ரூ.60 |
| 4. முடவட்டான் கால்சூப் (50 கி) | - ரூ.100 |
| 5.மூச்சுடர் கரிசாலை தைலம் 200 (எம்.எல்.) | - ரூ.300 |
| 6. அகத்தியர் கருவப்பட்டை பற்பொடி (80 கி) | - ரூ.45 |
| 7.கரிசாலை கண் மருந்து | - ரூ.70 |
| 8.மூலிகை தைலம் | - ரூ.40 |

# அருள்ஜோதி TV

அருள்ஜோதி
**Aruljothi TV APP**

**TCCL கேபிள் TV Channel No : 125**

## நிகழ்ச்சிகளின்
## சன்மார்க்கிகளின் கருத்துக்கள்...













**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை 'ARULJOTHI YOUTUBE CHANNEL' மூலம் காணலாம்.**


**ARULJOTHI MEDIA**

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT: 7305263516 044–35519288**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com


**BANK DETAILS**

**ARULJOTHI SANMARKKA TRUST**
**INDIAN BANK**
**A/C.No.:6206014778**
**IFSC CODE: IDIB000P034**
**BRANCH : PERAMBUR**


**Published by: S. Dhanalakshmi ,**

Published from New No.:33/Old No:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thayathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012